# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண். 314/ந/2025, நாள் 20.01.2026

K.முருகேசன்,
சிவகங்கை, சிவகங்கை மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
சிவகங்கை நகராட்சி,
சிவகங்கை, சிவகங்கை மாவட்டம். – எதிர்மனுதாரர்

சிவகங்கை மாவட்டம், சிவகங்கை, 7–வது குறுக்குத்தெரு, தொண்டி ரோடு, எண்.44 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. K.முருகேசன் என்பவரது 24.07.2025 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 28.07.2025 அன்று பெறப்பட்டு, 314/ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சிவகங்கை மாவட்டம், சிவகங்கை, 7–வது குறுக்குத்தெரு, தொண்டி ரோடு, எண்.44 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. K.முருகேசன் என்பவரது 24.07.2025 நாளிட்ட புகார் மனுவுடன் பெறப்பட்டுள்ள இணைப்பில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

| வ.எண். | வேலையின் பெயர் | வைப்புத் தொகை | கூடுதல் பிடித்தம் |
|---|---|---|---|
| 1. | சிவகங்கை நகராட்சி வார்டு எண்.26 அகிலாண்டபுரம், கக்கன்பாக்கம் பேவர் பிளாக் அமைத்தல். மதிப்பீடு 5.00 இலட்சம். ந.க.எண்.2359/2019/இ1 | ரூ.5000/– | ரூ.30,000/– |
| 2. | சிவகங்கை நகராட்சி வார்டு எண்.12ல் பிள்ளைவயல் காளியம்மன் கோவில் அன்னதானக்கூடம் அமைத்தல். மதிப்பீடு 7.00 இலட்சம் ந.க.எண்.65/2020/இ1 | ரூ.7,000/– | ரூ.42,000/– |
| 3. | சிவகங்கை நகராட்சி வார்டு எண்.10ல் உழவர் சந்தை அருகில் நியாயவிலைக்கடை அமைத்தல். மதிப்பீடு 9.50 இலட்சம் ந.க.எண்.65/2020/இ1 | ரூ.9,500/– | ரூ.52,000/– |

| | | | |
|---|---|---|---|
| 4. | சிவகங்கை நகராட்சி வார்டு எண்.12ல் வேலுநாச்சியார் தெரு, தொண்டி ரோடு குறுக்கு தெருவில் சிறுபாலம் அமைத்தல்<br>மதிப்பீடு 6.70 இலட்சம்<br>ந.க.எண்.2921/2020/இ2 | ரூ.6,700/– | ரூ.42,000/– |
| 5. | சிவகங்கை நகராட்சி வார்டு எண்.12ல் வேலுநாச்சியார் தெருவில் மழைநீர் வடிகால் அமைத்தல்.<br>மதிப்பீடு 3.00 இலட்சம் | ரூ.3,000/– | ரூ.18,000/– |

மற்றும் 2022–2023ம் ஆண்டு பொது நிதியின் கீழ் வார்டு எண்.5ல் உள்ள ராமச்சந்திரனார் நினைவுப்பூங்கா மராமத்துப்பணிக்கு செலுத்திய வைப்புத்தொகை ரூ.5,000/– மற்றும் ரூ.4,500/–. மேலும் பணி முடிவடைந்து பட்டியல் வழங்கியபோது பிடித்தம் செய்த கூடுதல் வைப்புதொகையினை திரும்ப வழங்குமாறு பணிவுடன் வேண்டுகிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரது மனு குறித்து சிவகங்கை நகராட்சி ஆணையரிடம் இம்முறைமன்ற நடுவத்தின் 09.09.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் அறிக்கை கோரப்பட்டது.

3. சிவகங்கை நகராட்சி ஆணையர் தனது 07.11.2025 நாளிட்ட கடிதம் ந.க.எண். 3452/2025/இ3–ன் அறிக்கையில் கீழ்க்கண்ட விவரங்களை தெரிவித்துள்ளார்.

சிவகங்கை நகராட்சி பொறியியல் பிரிவில் ஒப்பந்ததாரராக பணிபுரிந்த திரு.K.முருகேசன் என்பவர் ஒப்பந்ததாரராக பணிபுரிந்து வேலைகள் பார்த்த காலங்களுக்குரிய வைப்புத்தொகை மற்றும் அளவு புத்தகத்தின்படி (M.Book) பிடித்தம் செய்யப்பட்ட கூடுதல் வைப்புத்தொகை கீழ்க்கண்ட விவரப்பட்டியல்படி காசோலையாக ஒப்பந்ததாரர் திரு.K.முருகேசன் என்பவருக்கு வழங்கப்பட்டது என்ற விபரம் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

| வ. எண். | அளவு புத்தகத்தின் (M.Book) எண் | திட்டத்தின் பெயர் | FSD 1% | கூடுதல் வைப்புத்தொகை |
|---|---|---|---|---|
| 1. | 12/2020–2021 | MLA Scheme | ரூ. 5,000/– | ரூ. 24567/– |
| 2. | 24/2020–2021 | MLA Scheme | ரூ. 9,500/– | ரூ. 46410/– |
| 3. | 79/2020–2021 | General Fund | ரூ. 6,700/– | ரூ. 33,500/– |
| 4. | 36/2021–2022 | General Fund | ரூ. 3,000/– | ரூ. 15,000/– |
| 5. | 17/2023–2024 | General Fund | ரூ. 5,000/– | ரூ. 24,982/– |
| 6. | 18/2023–2024 | General Fund | ரூ. 4,500/– | ரூ. 22,500/– |
| | | | ரூ.33,700/– | ரூ.1,66,959/– |

2)வைப்புத்தொகை பதிவேடு கணக்கு தலைப்பு எண்.3401001ன்படி கீழ்க்கண்ட விபரப்பட்டியல்படி வைப்புத்தொகை காசோலையாக வழங்கப்பட்டது.

| வ. எண். | பெயர் | வைப்புத் தொகை பதிவேடு வருடம் | தலைப்பு எண் | பக்க எண் | வ. எண் | தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1. | திரு.K.முருகேசன் | 2020–2021 | 3401001 | 60 | 5 | 9500/– |
| 2. | திரு.K.முருகேசன் | 2020–2021 | 3401001 | 68 | 6 | 7000/– |
| 3. | திரு.K.முருகேசன் | 2021–2022 | 3401001 | 78 | 55 | 3000/– |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4. | திரு.K.முருகேசன் | 2019–2020 | 3401001 | 56 | 40 | 5000/– |
| 5. | திரு.K.முருகேசன் | 2020–2021 | 3401001 | 138 | 68 | 6700/– |
| | | | | | வைப்புத்தொகை 1% | 31200/– |

வைப்புத்தொகை ரூ.31200 + ரூ.33700 + ரூ.166959 = ரூ.231859/–(ரூபாய் இரண்டு இலட்சத்து முப்பத்தி ஒரு ஆயிரத்தி எண்ணூற்றி ஐம்பத்தி ஒன்பது) மட்டும் தொகைக்குரிய பாரத மாநில வங்கி காசோலை எண்.522807 நாள் 27.10.2025ம் தேதி காசோலையாக ஒப்பந்ததாரர் திரு.K.முருகேசன் என்பவருக்கு வழங்கப்பட்டு ஸ்டாம்புடன் கூடிய முத்திரை ரசீது பெறப்பட்டுள்ளது என்ற விவரம் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது." என தெரிவித்துள்ளார்.

4) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான சிவகங்கை நகராட்சி ஆணையர் ஆகியோரை 10.12.2025அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 01.12.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5)எதிர்மனுதாரரான சிவகங்கை நகராட்சி ஆணையர் தனது 08.12.2025 நாளிட்ட கடிதம் ந.க.எண்.3452/2025/இ3–னை இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ளார். அதில்:-

சிவகங்கை நகராட்சி பொறியியல் பிரிவில் ஒப்பந்ததாரராக பணிபுரிந்த திரு.K.முருகேசன் என்பவர் ஒப்பந்ததாரராக பணிபுரிந்து வேலைகள் பார்த்த காலங்களுக்குரிய வைப்புத்தொகை ரூ.31200/– மற்றும் அளவு புத்தகத்தின்படி (M.Book) பிடித்தம் செய்யப்பட்ட வைப்புத்தொகை (FSD) 1% 33,700/– மற்றும் கூடுதல் வைப்புத்தொகை ரூ.166959/–யினை பாரத மாநில வங்கி காசோலை எண்.522807 நாள் 27.10.2025ம் தேதி காசோலையாக திரு.K.முருகேசன் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டுவிட்டது என்ற விபரத்தினை 07.11.2025 நாளிட்ட கடிதத்தின் மூலம் தங்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

மேலும் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 01.12.2025 நாளிட்ட கடிதத்தில் புகார் மனுதாரரின் மற்றொரு பணிக்குரிய வைப்புத்தொகை மற்றும் கூடுதல் வைப்புத்தொகை தரப்படாததால் அதன் விசாரணை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 10.12.2025 அன்று ஆஜராக வேண்டுமென கோரப்பட்டுள்ளது.

2020–2021ஆம் ஆண்டிற்குரிய கோப்பு என்பதால், 31.12.2025 வரை கால அவகாசம் தரும்படியும், அதற்குள் கோப்பு பதிவறையில் கிடைக்கப்பெறும் பட்சத்தில் தொகையினை புகார் மனுதாரர் திரு.K.முருகேசன் ஒப்பந்ததாரருக்கு வழங்கிடவும் அதன் விபரத்தினை தங்களுக்கு அனுப்பி வைக்கிறேன் என்ற விபரத்தினை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6) மனுதாரர் திரு. K. முருகேசன் என்பவர் 10.12.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார். அதில்–

"நான் சிவகங்கை நகராட்சியில் 2022–2023ம் ஆண்டு ஒப்பந்ததாரராக மேற்கொண்ட பணிகளுக்கு பிடித்தம் செய்துள்ள வைப்புத்தொகை நாளது தேதியில் ரூ.2,80,000/–(ரூபாய் இரண்டு இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) நகராட்சியிலிருந்து எனக்கு கிடைக்கப்பெற வேண்டியிருந்தது. அதில் ரூ.2,31,859/– (ரூபாய் இரண்டு இலட்சத்து முப்பத்தி ஓராயிரத்து எண்ணூற்றி ஐம்பத்தொன்பது மட்டும்) பெற்றுக்கொண்டேன்.

மீதமுள்ள தொகை ரூ.49,000/– (ரூபாய் நாற்பத்தி ஒன்பதாயிரம் மட்டும்) நகராட்சியிடமிருந்து பெறப்பட வேண்டியுள்ளது. அதை விரைவில் வழங்குவதற்கு ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் வேண்டிக்கேட்டுக்கொள்கிறேன்". என தெரிவித்துள்ளார்.

7) எதிர்மனுதாரராகிய சிவகங்கை நகராட்சி ஆணையர் தனது கடித ந.க.எண்.3452/2025/இ3, நாள் 09.12.2025ல், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம், சென்னை அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள வழக்கு எண்.314/எம்/2025 நாள் 09.09.2025 தொடர்பாக 10.12.2025 அன்று சிவகங்கை நகராட்சி ஆணையாளர் அவர்களை ஆஜராக வேண்டி தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது சிவகங்கை நகராட்சி பகுதியில் SIR சிறப்பு வாக்காளர் திருத்தப்பணி நடைபெற்று வருகிறது. அப்பணிகளை எவ்வித தொய்வின்றி நடைபெற ஏதுவாக கண்காணிக்கப்பட்டு வரப்பட்டுள்ளதால் மேற்கண்ட தேதியில் ஆஜராக இயலாத சூழ்நிலையில் சிவகங்கை நகராட்சியில் பணிபுரியும் திரு.க.கருத்தவேல்பாண்டியன், கணினி உதவி திட்ட அமைப்பாளர், கணக்கர்(பொ) அவர்களை மேற்கண்ட விசாரணை தேதியில் ஆஜராக தனியரை தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து 10.12.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் மேற்படி கணினி உதவி திட்ட அமைப்பாளர், கணக்கர்(பொ) திரு.கருத்தவேல் பாண்டியன் என்பவர் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார். அதில்–

"மனுதாரரின் கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு கடந்த 27.10.2025 அன்று State Bank of India காசோலை எண்.522807 நாள் 27.10.2025 மூலமாக ரூ.2,31,859/– (ரூபாய் இரண்டு லட்சத்து முப்பத்தி ஓராயிரத்து எண்ணூற்றி ஐம்பத்தொன்பது மட்டும்) நகராட்சியால் மனுதாரருக்கு பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைய விசாரணையின்போது மனுதாரர் தனக்கு இன்னும் ரூ.49,000/– நகராட்சியில் இருந்து வரவேண்டும் எனத்தெரிவித்துள்ளார். இதுகுறித்து நகராட்சியில் உள்ள கணக்குகளின்படி மேற்படி தொகை ரூ.49,000/–த்தை (ரூபாய் நாற்பத்தி ஒன்பதாயிரம் மட்டும்) 31.12.2025க்குள் நகராட்சியால் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இம்முறைமன்ற நடுவர் முன்பு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்''. என தெரிவித்துள்ளார்.

இதனைத்தொடர்ந்து எதிர்மனுதாரரான சிவகங்கை நகராட்சி ஆணையர் தனது கடிதம் ந.க.எண்.3452/2025/இ3, நாள் 26.12.2025–ல் ஒப்பந்ததாரருக்கு விடுபட்ட வைப்புத்தொகை மற்றும் பில்லில் பிடித்தம் செய்யப்பட்ட 1% FSD ரூ.7000/– மற்றும் கூடுதல் வைப்புத்தொகை ரூ.35,000/– ஆக மொத்தம் ரூ.42,000/– என கணக்கீடு செய்யப்பட்டு அதற்கான பாரத மாநில வங்கி சிவகங்கை மெயின் கிளையின் காசோலை எண்.636451, நாள் 26.12.2025 மூலம் வழங்கப்பட்டு அதற்கான ரசீது பெறப்பட்டுள்ளது எனத் தெரிவித்து ரசீதின் நகலினையும் அனுப்பியுள்ளார்.

8) மனுதாரரின் புகார்மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரான சிவகங்கை நகராட்சி ஆணையரின் அறிக்கைகள், நகராட்சி கணினி உதவி திட்ட அமைப்பாளர் (ம) கணக்கர்(பொ) வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

2022–2023ம் ஆண்டு மேற்கொண்ட பணிகளுக்கு பிடித்தம் செய்துள்ள வைப்புத்தொகை ரூ.2,80,000/– (ரூபாய் இரண்டு இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்)

சிவகங்கை நகராட்சியால் வழங்கப்படவில்லை என்பதும், தற்போது ரூ.2,31,859/– (ரூபாய் இரண்டு இலட்சத்து முப்பத்தி ஓராயிரத்து எண்ணூற்றி ஐம்பத்தொன்பது மட்டும்) வழங்கப்பட்டுள்ளது என்பதும், மீதமுள்ள தொகை ரூ.49,000/– (ரூபாய் நாற்பத்தி ஒன்பதாயிரம் மட்டும்) வழங்கப்பட வேண்டியுள்ளது என்பதும், மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலத்திருந்து அறிய முடிகிறது.

மனுதாரரின் கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, மனுதாரர் ஒப்பந்ததாரராக பணிபுரிந்து வேலைகளுக்கு அளவு புத்தகத்தின்படி (M.Book) பிடித்தம் செய்யப்பட்ட வைப்புத்தொகை, FSD தொகை மற்றும் கூடுதல் வைப்புத்தொகையாக ரூ.2,31,859/– பாரத மாநில வங்கி காசோலையாக வழங்கப்பட்டுள்ளது என்பதும், விசாரணையின்போது மனுதாரர் மேலும் ரூ.49,000/– நகராட்சியில் இருந்து வரவேண்டும் எனத்தெரிவித்துள்ளது குறித்து நகராட்சி கணக்குகளை பரிசீலித்து 31.12.2025க்குள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகராட்சி கணினி உதவி திட்ட அமைப்பாளர் (ம) கணக்கர்(பொ) வாக்குமூலத்திலிருந்து அறிய வருகிறது.

நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகராட்சி கணினி உதவி திட்ட அமைப்பாளர் (ம) கணக்கர்(பொ) வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, மனுதாரருக்கு விடுபட்ட வைப்புத்தொகை மற்றும் பில்லில் பிடித்தம் செய்யப்பட்ட (FSD 1%) ரூ.7000/– மற்றும் கூடுதல் வைப்புத்தொகை (with held 5%) ரூ.35,000/– ஆக மொத்தம் ரூ.42,000/– M.book No.14-2020-21 பக்கம் 32ன்படி MLA Scheme க்குரிய தொகை ரூ.42,000/– என கணக்கீடு செய்யப்பட்டு அதற்கான செலவினப்பட்டியல் தயாரிக்கப்பட்டு காசோலையாக மனுதாரருக்கு வழங்கப்பட்டுவிட்டதாக சிவகங்கை நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.3452/2025/இ3, நாள் 26.12.2025ன் வழி தெரிவிக்கப்பட்டுள்ளதும் அறிய முடிகிறது.

இந்நேர்வில் மனுதாரரின் கோரிக்கை சிவகங்கை நகராட்சியால் ஏற்கப்பட்டு மனுதாரருக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதால் நகராட்சி ஆணையரின் அறிக்கை, மற்றும் நகராட்சி கணினி உதவி திட்ட அமைப்பாளர் (ம) கணக்கர்(பொ) வாக்குமூலம், நகராட்சி ஆணையரின் கடிதம் ஆகியவற்றில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்களை ஏற்று இப்புகார் மனு மீதான நடவடிக்கையினை இத்துடன் முடித்து வைக்கலாம் என முடிவு செய்து அவ்வாறே ஆணையிட.ப்படுகிறது.

2026–ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள் 20–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. K.முருகேசன்,
44, தொண்டி ரோடு,
7–வது குறுக்குத்தெரு,
சிவகங்கை, சிவகங்கை மாவட்டம்.

2) நகராட்சி ஆணையர்,
சிவகங்கை நகராட்சி,
சிவகங்கை மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

4) இணை இயக்குநர், ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்

இ.கோ/உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

21/1/26

செயலாளர்